**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 96/2016 Date:29.10.2025**

**(DW1)- பீர் முகமது**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் குறிப்பிடும் 40/2013 சங்கத்தை பதிவு செய்யும் சமயத்தில் சங்கத்திற்கான பைலா, Memorandum of Association முதலியவற்றை பதிவு செய்திருந்தேனா என்றால் பதிவு செய்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி சங்கத்தின் பைலா என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வாசாஆ**. 48** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி சங்கத்தின் Memorandum of Association என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வாசாஆ**. 49** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Memorandum of Association நான் பதிவு செய்யும் போது என்னுடைய சங்கத்திற்கு உரிமைப்பட்ட சொத்துகளின் விவரத்தை அதில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான், ஆனால் குறிப்பிடவில்லை.

2. அவ்வாறு குறிப்பிடாததால் மேற்படி நான் பதிவு செய்த 40/2013 சங்கத்தின் பெயரில் பாடசாலையின் சொத்துகளோ, கட்டிடங்களோ மேற்படி சங்கத்தின் கீழ் வராது என்றால் சரியல்ல, எங்களது பொது குழுவின் சங்க இணைப்பில் குறிப்பிட்டுள்ளோம். நான் பதிவு செய்த 40/2013 சங்கத்தின் பெயரில் பாடசாலையின் சொத்துகளோ, கட்டிடங்களோ மேற்படி சங்கத்தின் கீழ் வராது என்றாலும் எனவே பாடசாலையின் சொத்துகளுக்கோ கட்டிடங்களுக்கோ நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

3. என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 36 ஆவணத்தில் ISSK 40/13 பதிவெண் கொண்ட சங்கத்தின் கீழ் Orient Matriculation School வரவில்லையென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சங்கத்தின் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் பதிவெண் குறிப்பிடப்படவில்லை, பதிவு செய்த மாதமும், ஆண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது, வாசாஆ. 36 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சங்கத்தின் கீழ் பள்ளி வரவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் என்று பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கீழ் பாடசாலை வருகிறது என்ற கேள்விக்கு 07.10.1986 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. என்னுடைய எதிருரை பத்தி 23 ல் இரண்டு சங்கத்தையும் இணைத்ததாக சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவிப்பு கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் , எந்த துறைக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கும், பள்ளி கல்வி துறை அலுவலகத்திற்கும் அறிவிப்பு கொடுத்துள்ளேன். அவ்வாறு அறிவிப்பு கொடுத்ததை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல செய்கிறேன்.

5. என்னுடைய எதிருரையில் பத்தி 29 ல் சங்கம் 50/86 ஐ சங்கம் 40/2013 உடன் ஒன்றிணைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதே பத்தியில் 8 வது வரியில் சங்கம் 40/2013 ஐ சங்கம் 50/86 உடன் இணைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த சங்கத்தை எதனுடன் இணைத்தேன் என்றால் 50/86 சங்கத்தை 40/2013 உடன் இணைத்தேன். 1988 லிருந்து 1991 வரை தாளாளர் பதவி கிடையாது என்றால் சரியல்ல. அந்த காலத்தில் வாதி தான் பாடசாலையை நிர்வகித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த காலத்தில் Pre KG, LKG, UKG and 1st standard வரை தான் இருந்தது என்றால் சரிதான்.

6. 1997- 1998 காலகட்டத்தில் பாடசாலை அரசால் அங்கீகரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் தாளாளர் என்ற பதவி நடைமுறைக்கு வந்தது என்றால் சரியல்ல. என்னுடைய எதிருரையில் பத்தி 31 ல் 19.02.2012 முதல் நான் தாளாளராக இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன், அவ்வாறு நான் தாளாளராக பதவி வகிப்பதை இரண்டரை வருடம் கழித்து 07.06.2014 அன்று தான் Inspector of Matriculation School ற்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரியல்ல, 21.02.2012 ல் கொடுக்கப்பட்டது, 07.06.2014 ல்மீண்டும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

7. நான் அவ்வாறு மேற்படி தேதியில் தகவல் தெரிவித்திருந்தால் மேற்படி Inspector of Matriculation School ஆல் என்னை தாளாளராக அங்கீகரித்து அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அவ்வாறு அறிவிப்பு அனுப்ப மாட்டார்கள். என்னை தாளாளராக அங்கீகரிக்கவுமில்லை, நான் கடிதம் கொடுக்கவுமில்லையென்றால் சரிதான். என்னுடைய எதிருரையில் பத்தி 31 ல் சுனாமியில் ஆவணங்கள் அழிந்து விட்டதாக தெரிவித்துள்ள ஆவணங்கள் எது என்றால் School Register, சில பதிவேடுகள், சில வருகை பதிவேடுகள் அழிந்துள்ளன.

8. சொத்து சம்பந்தமான ஆவணங்கள் ஏதும் அழியவில்லையா என்றால் அழியவில்லை, அது வாதியால் எடுத்து கொள்ளப்பட்டது. என்னுடைய எதிருரையில்

பத்தி 32 ல் வாதி பள்ளி பாட சாலை சொத்துகளை ஜமாத்திற்கு நன்கொடை கொடுப்பதற்கு ஜமாத்திலிருந்து அறிவிப்பு கொடுக்க அனுமதி கொடுக்க மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வாதியால் ஜமாத்தின் அனுமதி இன்றி நன்கொடை அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் அவர் ஜமாத்தை மீறி அறிவிப்பு கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வாதி ஜமாத்தின் முன் அனுமதி பெற்று நன்கொடை அறிவிப்பு கொடுத்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அதிலுள்ள கையெழுத்து தலைவரின் கையெழுத்து கிடையாது.

9. என்னுடைய எதிருரையில் பத்தி 33 ல் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாடசாலையின் பிரச்சனையை கவனித்து கொண்டிருக்கிறார் என்று குறிபபிட்டுள்ளேன் , பொதுவாக பாடசாலை பிரச்சனை என்றால் நீதிமன்றமோ பள்ளி கல்வி துறையோ தான் பிரச்சனையை தீர்த்து வைக்க முடியும் என்றால் வாதியும் வாதியுடன் வந்தவர்களும் கும்பலாக பள்ளியில் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்ததால் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கவனித்து கொண்டிருந்தார்.

10. மேற்படி சம்பவம் நடந்தது 2012ம் வருடம் என்றாலும் 2013 ல் சங்கம் பதிவு செய்யப்பட்ட பின்பு தான் தாவா பிரச்சனை ஆரம்பித்தது என்றாலும் எனவே நான் எனது எதிருரை பத்தி 33 ல் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாடசாலையின் பிரச்சனையை கவனித்து கொண்டிருக்கிறார் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது எதிருரை பத்தி 34 ல் பள்ளி பொது குழுவை கூட்டுவதற்கு வாதியிடம் அனுமதி கோரியதற்கு வாதி அனுமதி அளிக்கவில்லையென்று குறிப்பிட்டுள்ளேன், அனுமதி வாய் மொழியாக பெறப்பட்டதா, எழுத்து பூர்வமாக பெறப்பட்டதா என்றால் வாய் மொழியாக பெறப்பட்டது. நான் அவ்வாறு எந்த அனுமதியும் கோரவில்லையென்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 04.11.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்